REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2020 நவம்பர் 27 வெள்ளிக்கிழமை

தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 88 இல. 282 | November 27, Friday, 2020 | 40பக்கங்கள் | 30/-



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி அலுவலகத்தில் பதவிப் பிரமாணம் செய்துகொள்டார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்

அஜித் தோவால் இன்று இலங்கை வருகிறார்

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் இன்று (27) இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவுகளுக்கு இடையிலான முத்தரப்பு பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்காக அவர் நாட்டிற்கு வருகை தருவதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் மரியா அஹ்மட் தீதியும் இந்த சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் இலங்கைக்கு மேற்கொள்ளும் இரண்டாவது உத்தியோக பூர்வ விஜயம் இதுவாகும்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இருதரப்பினருடனும் தனிப்பட்ட

09

உலக கால்பந்து நட்சத்திரம்

மரடோனா மரணம்

ஆர்ஜெண்டீனாவில் 3 நாள் துக்கம் அனுஷ்டிப்பு

மரடோனாவின் மறைவுக்கு ஆர்ஜெண்டீனாவில் 3 நாள் அரசுமுறை துக்கம் அனுசரிக்கப்படுகிறது. ஆர்ஜெண்டீனா மவைச் சேர்ந்த கால்பந்து நட்சத்திரம் டியேகோ மரடோனா (60) மாரடைப்பால் நேற்று முன்தினம் காலமானார்.

மூளையில் ஏற்பட்ட ரத்தக் கசிவுக்காக சமீபத்தில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட மரடோனா, மருத்துவமனையில் இருந்து திரும்பி 2 வாரங்களே ஆகிய நிலையில் தனது இல்லத்தில் வைத்து மாரடைப்பால் உயிரிழந்தார்.

கால்பந்து உலகின் நட்சத்திரங்களில் ஒருவராக ஜொலித்த அவர், கடந்த 1986 ஆம் ஆண்டில் ஆர்ஜெண்டீனா அணி உலகக் கிண்ணம் வெல்வதற்கு காரணமாக இருந்தார். அந்தப் போட்டியின்போது இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் மரடோனா அடித்த ஒரு கோல் மிகுந்த சர்ச்சைக்குள்ளானது. சக வீரர் தூக்கி அடித்த பந்தை அவர் தலையால் முட்டி கோலடிக்க முயன்றபோது அது அவரது கைகளில் பட்டதாகத் தெரிந்தது. அந்த ஆட்டத்துக்குப் பிறகு பேசிய மரடோனா, சர்ச்சைக்குரிய அந்த கோலை எனது தலை மற்றும் கடவுளின் கை

09

மாவீரர் தினம் தொடர்பான சிறிதரன் MP யின் உரை:

ஆளுந்தரப்பு, எதிரணி சபையில் கடும் ஆட்சேபம்

ஷம்ஸ் பாஹிம், சுப்ரமணியம் நிசாந்தன்

மாவீரர்களை நினைவு கூருவது தொடர்பான யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனின் எம்.பியின் உரைக்கு ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு எம்.பிக்கள் நேற்று கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

நிலையியற் கட்டளைகளுக்கு முரணாக அவர் உரையாற்றுவதாகவும் அவரின் உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டுமென்றும் கோரினர்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கமத்தொழில், நீர்ப்பாசன அமைச்சு மற்றும் இராஜாங்க

பாராளுமன்றில் நேற்று கூச்சல் குழப்பம் உரையை நீக்கவும் கோரிக்கை

WHO வின் அவதானம் மிக்க நாடுகள் பட்டியலில் இலங்கை

25 % மக்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படும் அபாயம்

ஷம்ஸ் பாஹிம், சுப்ரமணியம் நிஷாந்தன்

உலகளாவிய காலநிலை மாற்றத்தால் அதிக அவதானம் மிக்க 10 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளதுடன், உலக உணவு தாபனத்தின் மதிப்பீடுகளின் பிரகாரம் நாட்டின் 25 சதவீதமான மக்கள் உணவு பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டிய அபாய நிலையும் காணப்படுவதாக தெரிவித்த நீர்ப்பாசனத்துறை அமைச்சர் சமால் ராஜபக்ஷ, இந்த நிலைமையிலிருந்து நாட்டை

09

2021 வரவு - செலவுத்திட்டம்

கடற்றொழில் அபிவிருத்திக்கு 850 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

மேலும் பல சலுகைகள் வழங்கவும் திட்டம்

கடற்றொழில்துறை அபிவிருத்திக்கென இம்முறை வரவு செலவுத் திட்டத்திலூடாக சுமார் 850 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பேசும்போது ஐரோப்பிய நாடுகளின் தரத்துக்கு இலங்கையின் குடாவெல்ல, பேருவளை, தெவினுவர, காலி ஆகிய

09

CLICK

ரெபிட் என்டிஜன் பரிசோதனை தனியாருக்கு அனுமதி இல்லை

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

லோரன்ஸ் செல்வநாயகம்

ரெபிட் என்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு தனியார் இரசாயன கூடங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாதென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க இரசாயன கூடங்களுக்கு மாத்திரமே அதற்கான அனுமதி வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, நேற்றைய தினம் சில பிரதேசங்கள்

09

நீர் வழங்கல் அதிகார சபை அறிவிப்பு

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள அல்லது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளவர்களுக்கு நீர் கட்டணங்களை செலுத்துவதற்காக சலுகை காலம் வழங்கப்படுமென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

நீர் கட்டணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டாலும் தற்போது நாட்டின் சூழ்நிலையை

09

E. (O/L) பரீட்சை திகதி: தினங்களில் தீர்மானம்

கல்வியமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையை உத்தேசிக்கப்பட்ட தினத்தில் ஆரம்பிப்பது குறித்து அடுத்த 10 நாட்களுக்குள் தீர்மானிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார். எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையை நடத்துவதற்கு தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்களில் பரீட்சையை நடத்த முடியுமா என்பது தொடர்பில் அடுத்த 10 நாட்களில் தீர்மானித்து அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

PCR பரிசோதனைகளுக்கு மறுப்பு தெரிவித்தால் சட்ட நடவடிக்கை

பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண

லோரன்ஸ் செல்வநாயகம்

தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் உள்ள எவரும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்பட மறுத்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் எச்சரித்துள்ளது.

பிரதிப் பொலிஸ் மா அதிபரும் பொலிஸ் பேச்சாளருமான அஜித் ரோஹண இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் ஒலிப்பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும்

09

கொரோனா தொற்றாளர்கள் 31 பேர் கண்டுபிடிப்பு; அக்கரைப்பற்றில் உடனடியாக ஊரடங்கு உத்தரவு

கல்முனை வலயத்தில் 252 பாடசாலைகள் பூட்டு; கடும் கண்காணிப்பின் கீழ் நகரம்

காரைதீவு குறூப், பெரியநீலாவணை விசேட நிருபர்கள்

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றில் நேற்று வியாழக்கிழமை திடீரென ஒரே தடவையில் 31 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை பி.சி.ஆர் பரிசோதனை மூலம் இனங்காணப்பட்டுள்ளது.

09